# Love from Kannadasan's Perspective

**N. Vijayalakshmi[1],**
Research scholar(FT), Department of Tamil, Faculty of Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research, Chennai - 600078.
ORCiD: https://orcid.org/0009-0002-9880-1350, Email: vijaya_res@maher.ac.in
**Dr.S.Maheswari[2],**
M.A., M.Phil., Ph.D., NET, Assistant professor, Department of tamil, Faculty of Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research, K.K.Nagar, Chennai-78.
ORCiD: https://orcid.org/0009-0005-2165-2280, Email: maheshwari_s@maherfhs.ac.in

**Abstract:**

No other family ties or relationships were as important to lovers as the relationship between lover and beloved. In love, sometimes there are small flirtations and then reunions, and anxiety arises between lovers due to the obstacles imposed by family and society. Short-term and long-term separations between lovers cause anxiety in the lover. Love is a beautiful thing, but it can sometimes be confusing, leading to separation and anxiety between lovers. The best love ultimately ends in marriage. Life is a joyful, painful, and profound experience that manifests itself in many forms, and its various dimensions can be seen in this article.

**Keywords:** *The beauty of love, the first love, the struggle of the mind, love and the eyes, the sorrow of love.*

**References:**

1. Bharathidasan, (Puratchikavignar). Bharathidasan Padalgal [Bharathidasan's Songs]. Manivasagar Pathippagam, 1994.
2. (Note: The title translation is included in brackets for clarity, though MLA typically only requires the main language title.)
3. Kannadasan. Kannadasan Thiraiisai Padalgal Thoguthi – 1, 2, 3 [Kannadasan Film Songs Collection – 1, 2, 3]. Vanathi Pathippagam, 2011.
4. (Note: This assumes "Kannadasan" is the author's last name, which is common practice for Tamil names in citations, using the first name as the surname element.)
5. Kannadasan, Gandhi, editor. Palaradhu Paarvaiyil Kannadasan [Kannadasan in the Eyes of Many]. Kannadasan Pathippagam, 1989.
6. (Note: The editor is listed with the abbreviation "ed." or "editor." The original uses the abbreviation 'பஆ'.)
7. Kurunthogai. Editorial Committee, New Century Book House Private Limited, 1981.
8. (Note: For ancient texts or texts where the editor is a committee and the author is unknown/collective, you often start with the Title and list the committee where the author's name goes, or in the "other contributors" spot.)
9. Shanmugam, T. A. Ulanalaviyal [Psychology]. Tamil Veliyittu Kazhagam, 1970.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# கண்ணதாசன் பார்வையில் காதல்

[1]**திருமதி.ந.விஜயலட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) தமிழ்த்துறை, மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், கே.கே.நகர், சென்னை-78

[2]**முனைவர் செ.மகேஸ்வரி**, M.A., M.Phil., Ph.D., Net. நெறியாளர்,உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி , மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,கே.கே.நகர்,சென்னை-78.

**சுருக்கம் (Abstract)**

காதலன், காதலி என்ற உறவுக்கு ஈடாக வேறு எந்த சொந்தபந்தங்களும் உறவுகளும் காதலர்களுக்கு முக்கியத்துவமாகத் இருந்ததில்லை. காதலில் சில வேளைகளில் சிறு சிறு ஊடல்களும், பின்பு கூடல்களும் நிகழ்கின்றன, மேலும் குடும்பத்தினராலும், சமூகத்தாலும் ஏற்படுத்தப்படும் தடைகளால் காதலர்களிடையே கவலையும் எழுகிறது. காதலர்களிடையே ஏற்படும் குறுகியகால மற்றும் நீண்டகாலப் பிரிவுகள் காதலிப்பவரிடையே கவலையைத் தருகின்றன. காதல் என்பது ஒரு அழகான விசயம், ஆனால் அது சில நேரங்கலில் குழப்பங்கள் ஏற்ப்படுகின்றன, இதனால் காதலர்களிடையே பிரிவும் கவலையும் எழுகிறது. சிறந்த காதலானது இறுதியில் திருமணத்தில் முடியும். வாழ்க்கை என்பது பல வடிவங்களில் வெளிப்படும் ஓர் ஆனந்தமான வலி மற்றும் ஆழமான அனுபவம் எனத் தொடங்கி, அதன் பல்வேறு பரிமாணங்களை இக்கட்டுரையில் காணலாம்.

**குறிச்சொற்கள்**

காதலின் சிறப்பு, முதற்காதல்,மனப் போராட்டம் ,காதலும் கண்ணும் , காதலின் துயர்

**முன்னுரை**

கண்ணதாசன் படைப்புகளில் அதிகமான அளவில் காணப்படுவது காதலும், அவலமுமே கவிஞனின் மனதில் எந்த உணர்வு அதிகமாக காணப்படுகிறதோ, அந்த உணர்வே அவனது படைப்புகளில் அதிகமாகக் காணப்படும். காதல் என்ற சொல்லுக்கு அன்பு, பாசம், கருணை, நேசம் என்று பல்வேறு பொருள் வழக்கில் உள்ளது. பெற்றோர் பிள்ளைகளிடம் காட்டும் பாசம் ஒருவகை காதல் உணர்வின் வெளிப்பாடு, உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்குள் ஏற்படும் அதீத அன்பும், பொருள்கள் மேல் உள்ள மோகமும் காதல் என்றும் சொல்லலாம். இவை எல்லாவற்றையும் விட உயரிய அன்பு ஒரு ஆண் – பெண் ஆகிய இருவர் காதலன் – காதலி என்ற நிலையில் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்வதாகும். அன்பானது ஈர்ப்புத் தன்மை உடையதாக உள்ளது. அதே அன்பு நிலையானதாக, இளமைக் காலம் முதல் முதுமைக்காலம் வரை தொடர்ந்து இருக்கவேண்டும் அதுவே உண்மையான காதல் என்றும், கண்களில் தொடங்கிய காதலானது கல்யாணத்தில் முடிவுபெற வேண்டும். இத்தகைய கருத்துகளமைந்த திரையிசைப் பாடல்களே கண்ணதாசனின் படைப்புகளில் காணப்படுகின்றன.

**காதலின் சிறப்பு**

இரு மனங்களின் இணைவால் ஏற்படும் காதல் உணர்வு என்பது புனிதமானது, உலக வாழ்வில் கிடைக்கும் மற்ற அனைத்து உறவுகளையும், உறவினர்களையும் விட உயர்வாக அமைவது காதல் என்று காதலைப் பற்றி கண்ணதாசன் கூறும்போது இன்ப உலகமே காதலில்தான் ஆரம்பிக்கிறது எனவும்,

வாழ்வில் எதிர்நோக்கும் குறிக்கோள்களுக்கும் காதல் தூண்டு கோலாய் அமைவதோடு, ஒரு மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் காதலே துணையாக இருக்கிறது என்று எடுத்துக்காட்டுகிறார். அக்காதலானது அற்புதமானது என்பதை,

**"இன்ப உலகின் ரகசியமிங்கே ஆரம்பம்**
**ஏக்கம் நிறைந்த சரித்திரமிங்கே ஆரம்பம்**
**கண்கள் எழுதும் காவியமிங்கே ஆரம்பம்**
**கற்பனை உலகின் அற்புதமிங்கே ஆரம்பம்"**

**- க.க.தி.இ.பா.தொகுதி – 2 ப.162**

என்று **'சீமான் பெற்ற செல்வங்கள்'** என்ற திரைப்படத்தின் பாடலில் நாம் காணலாம்.

**காதல் உயிரியற்கை**

காதல் என்பது மனித இயல்பு, அது எவராலும் கட்டுப்படுத்த முடியாதது என்பதைக் குறிக்கிறது. இந்தக் கேள்வியை புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தனது பாடல்களில் கேட்கிறார். பாரதிதாசன் தனது கவிதையில் காணப்பட்டுள்ள கருத்தும் காதல் என்பது இயற்கை என்பதை,

**காதல் அடைதல் உயிரியற்கை அது**
**கூட்டில் அகப்படும் தன்மையதோ-அடி**
**சாதல் அடைவதும் காதலிலே - ஒரு**
**தடங்கல் அடைவதும் என்று கண்டாய்" பாரதிதாசன். பா, ப.63**

இப்பாடலில், காதல் என்பது தடைகளையும், எதிர்ப்புகளையும் தாண்டி நிற்கும் காதலினால் சாதலும் நிகழ்தல் உண்டு என்ற கருத்து, காதலின் மேன்மையினை உணர்த்துவதைக் காண முடிகிறது. அதுபோல கண்ணதாசன் காதல் என்பதை,

**ஒருத்தி ஒருவனை நினைத்துவிட்டால்**
**அந்த உறவுக்கு பெயரென்ன?**
**காதல்" க.க.தி.இ.பா.தொகுதி – 2 ப.189**

என்று **'சாரதா'** என்ற திரைப்படத்தில் காதலைப் பற்றிய விளக்கத்தைத் தந்துள்ளார். காதல் என்பது மத இன வேறுபாடுகள் இன்றி அமைவது உன்மையான காதல் என்று கூறியிருப்பதையும் அறியலாம்.

**முதற்காதல் :**

வாழ்க்கையில் இளைஞருக்கோ, அல்லது இளம் பெண்ணுக்கோ ஏற்படும் முதல் நிகழ்வு என்றுமே மறக்கமுடியாதது. அந்தவகையில் கவிஞர் கண்ணதாசனுக்கு முதற் காதல் ஒரு இளம் பெண்ணிடம் ஏற்பட்டது. அந்தக் காதலியின் நினைவு கடைசிவரை அவரது நினைவை விட்டும், மனதை விட்டும் நீங்கவே இல்லை என்பதைக் குறிப்பிடும் கவிஞர் அந்த முதற்காதல் காம உணர்ச்சி கலவாதது. காதல் என்பது காம உணர்வின் பாற்பட்டதே என்பது பொதுவானதாக ஆயினும், உண்மையான அன்பினால் அது தெய்வீக நிலையை அடைகிறது. இதனைக் கண்ணதாசன் தனது திரைஇசைப் பாடல் ஒன்றில், முதற்காதல் என்பது ஒரு மின்னல் தோன்றி மறைந்த தன்மையுடையதாக இருந்திருக்கிறது. அவர் தனது காதலியின் நினைவாக,

**முத்துக்களோ கண்கள்**
**தித்திப்பதோ கன்னம்**

**சந்தித்த வேளையில்**
**சிந்திக்கவே இல்லை**
**தந்துவிட்டேன் என்னை க.க.தி.இ.பா.தொகுதி -1 ப.171**

என்று 'நெஞ்சிருக்கும் வரை' என்ற திரைப்படத்தில் கண்டதே கண்கள் - கொண்டதே காதல் என்னும் நிலையை கண்ணதாசன் வெளிப்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது. காதலியின் இளமையான உருவத்தை கண்ட நேரத்தில் அதே நினைவுடன் தனது கற்பனையில் கவிஞனின் மனம் மகிழ்ச்சியடைகிறது.இதனை,

**பாவாடை தாவணியில் பார்த்த உருவமா?**
**பூவாடை வீசிவர பூத்தப் பருவமா?**
**பாலாடை போன்ற முகம் மாறியதேனோ?**
**பனிபோல நாணமதை மூடிய தேனோ க.க.தி.இ.பா.தொகுதி -3, ப.9**

என்று 'நிச்சய தாம்பூலம்' திரைப்பாடலின் மூலம் இளம் பருவத்து காதலியினை நினைத்துப் பாடப்பட்ட பாடலாகக் காணலாம். அறியா சிறு வயது முகத்தில், கள்ளமில்லா பால் போன்ற நிலவு முகத்தில், அவளுடைய இலேசான நாணத்தின் சாயல் படரும் பருவம் என்பதை பாடல் வரிகள் உணர்த்துகின்றன. எத்தனையோ மலர்கள் இருந்தாலும் மனது விரும்புவது ஒன்றை மட்டுமே. எத்தனையோ பெண்கள் என்றாலும் மனம் விரும்புவது ஒருத்தியை மட்டுமே. அவள் இவளே என்று நினைத்து,

**ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ - உலகம்**
**அறிந்திடாத பிறவியம்மா நீ**
**பார்வையிலே குமரியம்மா**
**பழக்கத்திலே குழந்தையம்மா க.க.தி.இ.பா.தொகுதி -1, ப.421**

என்ற பாடல் '**கை கொடுத்த தெய்வம்**' திரைப்பட்த்தின் மூலம் காதலியின் சிறப்பு நினைவு கூறப்பட்டுள்ளது. இந்தப் பாடல் இவரது காதலியின் குழந்தை மனமும், இளம் பருவமும், அவர் காதலியிடம் இருக்கும் என்பதை அறியமுடிகிறது.

**மனப் போராட்டம் :**

மனப்போராட்டம் என்பது ஒரு நபரின் மனதில் ஏற்படும் **"சூழ்நிலைப் பொருள்களும், பிற மனிதரும் முதல் காரணமாகும். திறன் குறைவு, நாட்டக்குறைவு முதலியவைகள் இரண்டாம் காரணமாகும்..."** என்பது உளவியல் அறிஞர் தா. ஏ.சண்முகம் அவர்களின் கருத்தாகும். இந்த உளவியல் கருத்தின் படி பார்க்கும்போது அவரது குடும்பச் சூழலோ, காதலியினுடைய குடும்பச்சூழல் மற்றும் பய உணர்வு, பிற மனிதர்களும் அவர்களால் விளைந்த தடைகளும், கண்ணதாசனின் காதல் நிறைவேறாமல் போனதற்க்கும், மன முறிவுக்கும் காரணமாக இருந்தது எனக்கூறலாம். இந்தக் கருத்தை ,

**கண்ணிருந்தும் ஓவியத்தை**
**காட்டி மறைத்தார் - இரு**
**காதிருந்தும் பாதியிலே**
**பாட்டை முடித்தார் க.க.தி.இ.பா.தொகுதி -1, ப.269**

என்ற பாடல் வரிகள் இவரது காதல் முறிவை வெளிப்படுத்தும் பாடலாகவே விளங்குகின்றது. பார்க்கக் கண்கள் இருந்தும் பாதியிலே ஓவியத்தை மறைத்தலும், பாட்டைப் பாதியிலே முடித்தலும், மனதை அறிந்து காதலை வெளியிடுவதற்கு முன் பெண்ணை மறைத்தார் என்பதும், மற்றும் பிற மனிதரால் வந்த தடையாகவும் உணரமுடிகிறது.

**காதலும் கண்ணும் :**

காதல் பிறக்கும் இடமாக கண்களே கூறப்படுகிறன. கண்ணே காதல் பிறக்கும் இடமாகவும் உள்ளது. அதன் பின்னர் வருவதே நம் நெஞ்சாகும். எல்லாக் கவிஞர்களும் கண்ணையே காதலின் முதல் பிறப்பிடமாகக் வைத்துள்ளனர்.

**கொழிக்கும் ஆணழகன் – அவன்**
**கொஞ்சி வந்தே என**
**விழிக்குள் போய்ப் புகுந்தான் – நெஞ்ச**
**வீட்டில் உலாவுகின்றான்** **பாரதிதாசன் பாடல் , ப.70**

எனும் பாடலில் பாதி நிலையிலையே மலராமல் கருகிய காதலின் துயரைப் பாடிய தன்னிலை விளக்கமாகப் பாடப்பட்ட பாடல்களும்,

**"கண் படைத்த குற்றத்தால் அழகியேன் என்**
**கருத்தேறி உயிர் ஏறிக் கலந்து கொண்டான்!** **பாரதிதாசன் பாடல் , ப.74**

என்றும் பாரதிதாசன் பாடலும் காதல் என்பது கண்கள் செய்த குற்றத்தால் விளைவது அல்ல மனத்தில் வந்து, கருத்தில் வந்து, உயிரோடு கலந்து விடுவது தான் காதல் என்று கூறியுள்ளதை அறியலாம்.

அதுபோல, கண்ணதாசனின் காதலின் சிறப்பு, கண்டதும் காதல், அதுவும் பாதியிலேயே முறிந்து விட்டாலும், அதன் நினைவாக எழுதப்பட்ட பாடலினை மிக விரும்பிப் பாடுவதை நாம் அறியலாம். இதன்மூலம் அவரது காதலின் மீது வைத்திருக்கக்கூடிய மதிப்பையும் காணலாம். இதனை,

**பார்த்தேன் சிரித்தேன்**
**பக்கம் வரத் துடித்தேன் - அங்கு உனைத் தேன் என நான் நினைத்தேன்**
**க.க.தி.இ.பா.தொகுதி -2, ப.139**

என்றப் பாடல் 'வீர **அபிமன்யு**' திரைப்பட்த்தின் மூலம்தனது காதலியின் நினைவைக் கூரியுள்ளார். இப்பாடலை அடிக்கடி கண்ணதாசன் முணுமுணுத்துக் கொண்டே இருப்பாராம். **அவரோட பாட்டுக்களிலேயே அவருக்குப் பிடிச்சது, பார்த்தேன், சிரித்தேன், பக்கம் வரத் துடித்தேன் தான். இதை பாடிக்கிட்டே யிருப்பார். காரை விட்டு, வீட்டுக்குள்ளே நுழையறபோதே இதைப் பாடிக்கிட்டே தான் நுழைவார்** என்று கண்ணதாசனின் மகள் ரேவதி சண்முகம் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் அவரது காதலின் தரத்தை மேலும் உயர்த்திக் காட்டியிருப்பதை நாம் உணரமுடிகிறது. **காதலின் துயர்:**

காதலித்தல் என்பது அன்புடைய நெஞ்சம் தாமாகவே ஒன்று கலத்தலாகும். தலைவனுக்கும் தலைவிக்குமிடையே எதிர்பாராத சந்திப்பின்பால் காதல் மலர்ந்தது. இப்படி முன்பின் தெரியாத இளைஞனுடன் கண்டதும் காதல் ஏற்பட்டதால் தலைவிக்குத் தலைவன் மேல் ஐயமேற்படுகிறது, எங்கு இவன் நம்மை விட்டுச் சென்றுவிடுவானே என்ற பயம் தான் என்பதை,

**யாயும் ஞாயும் யாராகிய ரோ நுந்தையும் எம்முறை கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே** **குறுந், பா.40**

குறுந்தொகைப் பாடலாகும். அதுபோல கண்ணதாசனும் காதல் என்பது இந்த வழியாகத் தோன்றும் எனக் கூறுவதுடன், தனது காதலும் இவ்வண்ணம் தோன்றியதே என்பதையே தனது பாடல் களில் வெளிப்படுத்தியுள்ளார்.

**'யாரிடத்தில் கேட்டு வந்தோம் யார் சொல்லிக் காதல் கொண்டோம்**
**நாயகனின் விதி வழியே**
**சேர்ந்து வந்தோம்" க.க.தி.இ.பா.தொகுதி -2, ப.286**

என்ற பாடலில் யாரென்று தெரியாமல், முன்பின் உறவில்லாத ஒரு பெண்ணிடம் மனதைப் பறிகொடுத்த நிலையினையும்,, தன்னுணர்வினை புலப்படுத்தும் நிலையிலும் அனுபவத்தைக் கொண்டு எழுதியுள்ளார். காதல் செய்வது பாவமல்ல, பிரிவு ஏற்படாத வரை. பிரிவு ஏற்பட்டதும் அது ஏற்படுத்தும் துன்பமே கண்களைப் பழிக்கும் நிலைக்கு தள்ளப் படுகிறது. இவ்வாறு கண்ணதாசன் காதலையும், கண்ணையும் போற்றிப் பாடியுள்ளார்.

**முடிவுரை**

கண்ணதாசனின் காதல் படைப்புகள் முழுவதும், தனது காதலியின் உருவம், பண்புகள் மற்றும் மனம், காதல் பிரிவு போன்ற தன்னுணர்வு வெளிப்பாடுகளாகவே உள்ளன. காதல் என்பது இனிமையானது. அன்பும் உள்ளமும் இணைந்து செயல்பாடுகளைப் புனிதமாக்குவதாகும். காதல் பிரிவு சாதலில் முடியும். மேலும் கவிஞர் கடந்து வந்த காதல்வாழ்வு முற்றிலும் மாறுபட்டதாக இருப்பினும் கவிஞரின் அனுபவமே காதலின் மேன்மையை விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

**பார்வை நூல்கள்**

1. கண்ணதாசன், கண்ணதாசன் திரையிசைப்பாடல்கள் தொகுதி –1,2,3
   வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2011.
2. காந்தி கண்ணதாசன் (பஆ) பலரது பார்வையில் கண்ணதாசன் கண்ணதாசன் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 1989. .
3. சண்முகம் த.ஏ. உளநலவியல். தமிழ் வெளியீட்டுக் கழகம் சென்னை, முதற்பதிப்பு 1970.
4. பதிப்பாசிரியர் குழு குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை இரண்டாம் பதிப்பு 1981.
5. பாரதிதாசன் (புரட்சிக்கவிஞர்) பாரதிதாசன் பாடல்கள் மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு 1994.